கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – I 2009/2010
(ஜனவரி 2013) (வெளிவாரி)

LIBRARY
10 JUN 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

**FA 202 உலகக் கலை வரலாறு**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

1. "ஆதி மனிதனின் வாழ்வியல் தேவைகளின் பூர்த்தியாக்கமே வரலாற்றுக்கு முற்பட்ட காலக் கலைகளின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை வரலாற்றுக்கு முற்பட்ட காலக்கலைகளில் ஒன்றாகக் கருதப்படும் பலியோதிக் (paliothic Art) கலைகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

2. எகிப்திய சிற்பங்கள் எகிப்திய சமூகம், அதன் நம்பிக்கை பற்றி வழங்கும் செய்திகளை உதாரணங்கள் மூலம் விளக்குக?

3. "கிரேக்கக் கலைகள் உலகக் கலை வரலாற்றில் சிறந்த செந்நெறிச் சான்றுகளாக விளங்குகின்றன."

   I. கிரேக்க கட்டடக்கலையின் ஒரு பகுதியாக வளர்ச்சியடைந்த தூண்களை வகைப்படுத்தி விளக்குக.
   II. கிரேக்கச் சிற்பங்கள் உடல் கம்பீரத்திற்கும் உடல் அழகிற்கும் வழங்கும் முக்கியத்துவத்தைத் தருக?

4. ரோமக் கட்டட சிற்பக் கலைகள் தமக்கென தனித்துவமான பண்புகளைக் கொண்டிருந்தபோதும் அவை கிரேக்கக் கலைகளின் செல்வாக்கிற்கு உட்பட்டவையாகவே விளங்குகின்றன." ஆராய்க.

5. மறுமலர்ச்சிக்கால சிற்ப ஓவியங்கள் மனித உடற்கூற்றியலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்குகின்றன." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை மைக்கல் அஞ்சலோவின் படைப்புக்களை ஆதாரமாகக் கொண்டு விளக்குக?

6. 18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோற்றம் பெற்ற மனோரதியக் கலையின் (Romantic Art) பண்புகளை மனோரதியச் சிற்பங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?

7. யதார்த்தவாதக் கலைஞர்கள் ஓவியத்தில் சமகால வாழ்வியல் விடயங்களை சித்திரிப்புப் பொருளாக்கியதையும், அதனை அவர்கள் வெளிப்படுத்திய முறையையும் விளக்குக?

8. நவீன விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சியால் நுண்கலைகளின் செயற்பாட்டில் ஏற்பட்ட மாற்றங்களையும் வளர்ச்சியையும் மதிப்பிடுக.

***